
அரசு அலுவலர்

# இதயக்குரல்

"ARASU ALUVALAR
IDHAYAKKURAL"

ஆசிரியர்: கீ. க. மோகன். பி. ர.,

(அரசு - 3) மார்ச் '91 - ஏப்ரல் '91 (இதயம் - 5, 6



7-4-91 அன்று கோவை மாவட்டாட்சியர் திரு. எம் கலைவாணன், இ.ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து, கோவை மாவட்ட அரசு அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் பிரச்சனைகள் குறித்து விவாதித்தார். கோவை மாவட்ட தலைவர் திரு. பெ. ராமலிங்கம், மாவட்டச் செயலாளர் திரு. வி. செல்வம், நீலகிரி மாவட்டத்தலைவர் திரு. வைதீஸ்வரன், கூட்டுறவுத்துறை அலுவலர் கழக மாநில பொதுச் செயலாளர் திரு. பி. கனகராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி மற்றும் டி பிரிவு)

அரசு அங்கீகார ஆணை எண்: 99 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 3-2-79

# தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் தோட்டக்கலை டிப்ளமோதாரர்கள் சங்கம்!

6-4-91 அன்று தர்மபுரியில் ஈராண்டு விவசாய விஞ்ஞான சான்றிதழ் பெற்றுடையோர் சங்கம், வேளாண்மை டிப்ளமோதாரர்கள் சங்கம், தோட்டக்கலைத் துறை டிப்ளமோ தாரர்கள் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களின் பொதுக்குழு கூடி ஒரே சங்கமாக இணைந்து 'தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் தோட்டக்கலை டிப்ள மோதாரர்கள் சங்கமாக' செயல்பட தீர்மானிக்கப்பட்டது.

**இந்த கூட்டத்தில் பின்வரும்**
**மாநில நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்!**

| | |
|---|---|
| மாநில தலைவர் : | திரு பெ. முத்துராமலிங்கம், (திண்டுக்கல்) |
| மாநில துணைத் தலைவர் : | திரு. எம். இராமலிங்கம், (வ. உ. சி) |
| ,, | திரு. வி. சீனிவாசன், (தர்மபுரி) |
| மாநில பொதுச் செயலாளர் : | திரு. டி. தாம்சன், (தர்மபுரி) |
| மாநில பொருளாளர் : | திரு. நெடுஞ்செழியன், (சேலம்) |
| மாநில அமைப்புச் செயலாளர் : | திரு. அ. அரங்கதாஸ், (திருச்சி) |
| மாநில பிரச்சாரச் செயலாளர் : | திரு. கே. சிவகுமார், (தர்மபுரி) |
| மகளிர் அணி செயலாளர் : | திருமதி விஜயலட்சுமி, (தர்மபுரி) |
| தலைமை நிலையச் செயலாளர் : | திரு பாபு, (சென்னை) |
| மாநில இணைச் செயலாளர் : | திரு கே. அங்கமுத்து, (கோவை) |
| மாநில செயலாளர்கள் : | திரு. சு. பழனிச்சாமி, (திண்டுக்கல்) |
| ,, | திரு. ஞானசேகரன், (தர்மபுரி) |
| ,, | திரு. மணிவேலு, (மதுரை) |
| மாநில தணிக்கையாளர்கள் : | திரு. ஏ. ஆர். சுப்பையா |
| ,, | திரு ஆர். சொக்கலிங்கம். |

**பணி வெல்க! என வாழ்த்துகிறோம்.**

---

## படிவம் 4
(விதி 8 காண்க)

| | | |
|---|---|---|
| 1) | வெளியிடும் இடம் : | சென்னை |
| 2) | வெளியீடு : | மாதம் ஒரு முறை |
| 3) | அச்சிடுபவர் இந்தியரா ? | ஆம் |
| | முகவரி : | தி. சந்திரா<br>ராசாத்தி பிரிண்டர்ஸ்<br>182, பெல்ஸ் சாலை<br>சென்னை-5 |
| 4) | ஆசிரியர் வெளியிடுபவர் இந்தியரா? | ஆம்<br>கீ. க. மோகன் |
| | முகவரி ; | தமிழ்நாடு அரசு<br>அலுவலர் கழகம் (சி மற்றும் டி. பிரிவு)<br>சேப்பாக்கம், சென்னை-5. |
| 5) | ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ளவர்கள் : | தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம்<br>(சி மற்றும் டி. பிரிவு) சேப்பாக்கம்,<br>சென்னை-5. |

கீ. க. மோகன், ஆகிய நான் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவு. நம்பிக்கை பொறுத்தவரையில் உண்மையானவை என்று இதன் மூலம் உறுதி கூறுகின்றேன்.

**கீ. க. மோகன்**
(வெளியிடுபவர்)



# ஆளுனர் அரசும் -
# அரசு அலுவலர்களுக்கு
# அளிக்கப்பட்ட சலுகைகளும் !

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

தமிழகத்தில் ஆளுனர் ஆட்சியில் பல் வேறு சலுகைகளை அறிவித்துள்ளனர். குறிப்பாக அலுவலக உதவியாளர்கள் பதிவுரு எழுத்தர்கள், கல்வித் தகுதி பெற்றிருந்தால் இளநிலை உதவியாளர் பதவி உயர்வில் செல்கின்ற உத்தரவிற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் அடித்தள ஊழியர்கள் பதவி உயர்வு பெறாம்ல் அவதிக்கு உள்ளாகி வந்தனர். அந்த தடையினை இன்று நீக்கி பதவி உயர்வில் செல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தி முடித்தவுடன், கூட்டுறவு இளநிலை ஆய்வாளர்களாக தற்காலிகமாக சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த சுமார் 1000 பேர்கள் பணி இழக்கின்ற நிலை ஏற்பட்டது. மேலும் நிரந்தரப் பணியாளர்களாக இருந்தவர்களுக்கும் பணி இழப்பு, பத்வி இறக்கம் ஏற்பட்டது. இந்த நிலைகளை மாற்றி அமைக்கும் வகையில் பணியிழந்தவர்களின் பாதிப்புகளை துடைக்கும் வகையில் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு அலுவலர்களுக்கு கூடுதல் அக விலைப்படி உயர்வு 8% அளிக்கப்பட்டது. அதே விகிதத்தில் தமிழக அரசு அலுவலர்களுக்கு 8% கூடுதல் அகவிலைப் படி 1-1-91 முதல் வழங்க உத்தரவிடப்பட்டது. எனினும் 1-1-91 முதல் தரப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை மூன்று தவணைகளில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. நிலுவைத் தொகையினை தவணை முறையில் வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். இதனால் அரசு அலுவலர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

எனினும் ஆளுனர் அரசில் பிறப்பித்துள்ள உத்தரவுகளுக்கு நாம் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். மே'91-ல் தேர்தல்களை நடத்த வேண்டிய கடமை நமக்குள்ளது. எனவே தேர்தல் பணிகளில் நாம் முழுமையாக ஈடுபட்டு தமிழக அரசுக்கு உறுதுணையாக செயல்பட்டு தேர்தல்களை முடித்துத் தருவோம் என உறுதி கூறுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

கீ. கி. மோகன்

## ஊரக மகளிர் நல அமைப்பாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட கடிதம்.

From
Thiru. A. Elangovan, I.A.S.,
Collectore of South Arcot,
Old Dist. Board Bulidings,
Cuddalore-607 001.

To
The Commissioner of and
Secretary to Govt, Rural
Devpt., Department,
Fort St. George,
MADRAS-600 009.
THROUGH The Commissioner of
Rural Devpt, Kuralagam
Madras-108.

Roc.PA-5/53903/901/
Dated, 21-1-91

Sir,

Sub : ESTABLISHMENT - Panchayat Devpt. Department - South Arcot District - Tailoring Instructress (Rural woman Welfare Organisers) in Panchayat Unions - promotion as Junior Assistant - Representations received - proposal Transeission of - Reg.,

Ref :
1. G.O.Ms.No.1300/Rural Devpt. Department/Dated. 22-3-'74
2. G.O.Ms.No. 585/ Rural Devpt. Department/Dated, 12-4-'89
3. G.O.Ms.No.349/personnal & Administiative Tribunal/Dated, 12-4-'89.
4. G.O.Ms.No.1765/Revenue Department Dated, 07-8-'90.
5. G.O.Ms.No.963/Rural Devpt. Department (E-7)/ Dated, 28-11-'90
6. G.O.Ms.No.964/Rural Devpt. Department (E-7)/Dated, 28-11'90.
7. Lr.No.42376/E-V/86-13/ Dated, 12-6-'87 of the Secretary to Govt., Rural Devpt., Department, Madras.
8. District President, Tamil Nadu Rural women Organisor Association, Representation Dated, 23-11-'90.
9. G.O.Ms.No.497/Rural Devpt. Department/Dated, 26-6-'90

As per G O.Ms.No.1300/Rural Devpt. & Local Administration Department/ Dated, 22-3-'74 all the Ministerial staff of the Panchayat Union such as Junior Assistant/Cashiers and Typists were provincialised with effect from 01-04-'74, and thereafter the Posts of Junior Assistant in the Panchayat Unions has been brought under the purview of Tamil Nadu Public Service Commission.

As per G.O.Ms.No.585/Rural Devpt. Department/New Service Rules were framed to the staff working in the panchayat Union merging all the Categories under the Name of "Single Service Rules" and subsequently promotional benefits for Record Clerks and part Time Clerks were given inG.O.Ms.No.963/964/Rural Devpt. Department/ Dated, 28-11-'90. As per G.O.Ms.No.1765/Revenus Department/Dated, 07-8-'90 consolidated pay surveyor/Draftsman, Junior Assistant/qualified Office Assistant/Field Assistants and Night Watchman in the survey and Land Records Department were given appointment as Junior Assistants in the Panchayat Unions by creating one Post of Junior Assistant to attend to the work of the Nutrition Meals Centres of the schools which have been transferred to the Control of the Panchayat Union.

Now, Representations have been received from the Qualified Rural Women Welfare Organisers (Tailoring Instructress) to appoint them as Junior Assistants in the Panchayat Union.

In this connection, kind attention is invited to the Reference 7th cited wherein it has been instructed that Qualiafied Tailoring Instructress may be promoted as Junior Assistant/Rural Welfare Officers Grade-II in relaxation of Rules.

There is No Specific mention about the Rules which are to be got relaxed and that whether they can be appointed in anticipation of the relaxation of the Rules concerned, OR they can be appointed only after getting the rules relaxed. Further there is also No mention as to whether the concurrence of the Tamil Nadu Public Service Commission is necessary OR Not.

I therefore request that detailed Instructions may be issued in the matter clarifying the above position.

Yours faithfully,
for Collector of P.A.,
Cuddalore-1.

## GOVERNMENT OF TAMIL NADU

## ABSTRACT

PUBLIC SERVICES-Tamil Nadu Ministerial Service-Appointment of Junior Assistants by Recrurtment by Transfer from categories of Record Clerks, Office Assistants etc.-Restrictions-Removal of Orders Issued.

(Personnel and Administrative Reforms (Personnel. J.) Department)

G.O.Ms.No.90

Dated : 12-3-1991.
Masi 28. Pramodhudha,
Thiruvalluvar Aandu 2022.
Read :

1. Government Order Ms.No.621, Public (Services Department, dated 26-3-1941
2. Government Order Ms.No.854, Personnel and Administrative Reforms Department, dated 23-7-79.
3. Government Order Ms.No.42, Personnel and Administrative Reforms Department, dated 22-1-1981.
4. Government Order Ms.No. 502. Personnel and Administrative Reforms Department, dated 10-6-1987
5. Government Letter Ms.60191/Per. J./ 87-1, Personnel and Administrative Reforms Department, dated, 29-6-87
6. Government Letter No. 116111/Per. J./89-1, Personnel and Administrative Reforms Department, date 15-2-90
7. Orders of the Administrative Tribunal in Orginal Application No.4063/90 to 4071/90 filed by prtain Office Assistants/ Record Clerks dated 27-2-1990.
8. Representation from the Office Assistants/Reeord. Clerks based on the orders of the Tamil Nadu Administrative Tribunal dated 9-1-91.

ORDER :

In the Government Order second read above, ban was imposed on appointment of Recored Clerks, Office Assistants etc, as Junior Assistant by recruitments by transfer. The above ban was lifted in the Government Order third read above and the appointing anthorities were allowed to fill upto 10% of the vacancies in the category of Junior Assistants with the eligible Record Clerks, Office Assistants according to seniority. Then in the Government Order fourth read above, Government cancelled the prescribed limit of 10% and the Record Clerks, Office Assistants etc. who had completed 5 years of service are eligible for appointment as Junior Assistants. Subsquently, in order to consolidate available vancancies to accommodate the Junior Assistants regularised with reference to orders issued in Government Orders Ms.No.996, Personnel and Administrative Reforms (Placements) Department, dated 22-9-84 and who were ousted from service for want of vacancies Allotment of the orders issed in Government Order Ms.No.259. Personnal and Administrative Reforms (Personnel. J.) Department, dated 27-4-1989, the Government issued instructions in the letters read above to avoid appointment of Record Clerks, Office Assistants etc. as Junior Assistants, by recruitment by transfer till those candidates were absorbed.

2) Rule 3 (g) of the Tamil Nadu Ministerial Service Rules provides that for special reasons appointments may be made to the categories of Junior Assistants, besides to others, by recruitment by transfer from any other service. It has been specifically indicated in the Government Order first read above that in the absence of any indication in the rule or eleswhere as to what constitute "Special Reasons" each appointing authority is left to interpret the term in his own way and make appoinments by transfer. In order to prevent an abuse of the rule, the following have been regarded as typical instances of special reasons which would justify the making of appointments by transfer :-

i) Good work and conduct in the post held, coupled with long service and lack of any other opening or prospects :

ii) High educational qualification such as a B.A. degree ;

iii) Want of approved candidates in both the departmental and the Collector's lists.

iv) Ineligibility for admission to the competitive Examination due to being a full member or an approved probationer in another service ;

v) Conversance with the work of the office or department and the need for a person possessing previous experience of the work of that office or department ;

vi) Special consideration for being the son of a person who had rendered a long and faithful service under the Government ; and

vii) Physical disability or unifitness for executive work which does not render a person unsuitable for ministerial work.

3) Nine office Assistants, and Record Clerks have filed Original Applications in the Tamil Nadu Administrative Tribunal staking their claims for appointment as Junior Assistants by recruitment by transfer in the regular vacancies now available in he Departments. In those Original Applications, the Tirbunal has directed the appli-

cants to make representations setting out their casues in detail to the Secretary to Government in Personnel and Administrative Reforms Department, through proper channel. It has also directed the Secretary to Government Personnel and Administrative Reforms Department, to examine the case de-nove and issue suitable orders in the matter Apart from thatseveral Heads of Department and service Associations have also represented to consider to remove the restrictions imposed in the letters referred to above.

4) The method of appointing Record Clerks Office Assistants etc. as Junior Assistants by recruitment by transfer was in force for the past five decades. But such appointments could be made only for "Special reasons" enumerated above. It is clear that this method of appointment cannot be resorted to as a matter of routine. Restrictions were imposed from time to time to make such appointment by recruitment by transfer. Considering the fact that there is provision for vertical mobility of Record Clerks Office Assistants etc. Since a long time, the Government have carefully examined the matter and issue the following orders :-

i) The restrictions imposed for filling up the vacancies in the category of Junior Assistents by recruitment by transfer from any other service under Rule 3 (g) of the special Rules of Tamil Nadu Ministerial Service be removed.

ii) The Heads of Departments, the appointing authorities and the Uuit Officers are permitted to make appointment of Record Clerks, Office Assistants, etc. as Junior Assistants with reference to rule 3 (g) of the Tamil Nadu Ministerial Service Rules, supject to the conditions :

a) that the Record Clerks, Office Assistaets one. should have put in a service of not less than five years in regular capacity.

b) the Record Clerks Office Assistants etc. satisfy the "special reason" prescribed in Government Order Ms.No.621, Pubulic (Services) Department, dated 26-3-1941.

and

iii) Such appointments should not exceed 10% (ten percent) of vacancies in the category of Junior Assistants.

(By order of the Governor)

F. J. VAZ,
Secretary to Government.

GOVERNMENT OF TAMIL NADU
Finance (Pay Cell-II) Depatment
Letter No. 105442/P.C.II/90-6, dated 24-1-1991

From

Thiru T.R. Ramaswamy, I.A.S.,
Joint Secretary to Government.

To

All Heads of Department
All Secretaries to Government

Sir,

Sub : Revised Seales of Pay, 1989 - Pay Commission arrears for the period from 1-6-88 to 31-5-89Crediting to GPF account of the employees - Meeting held on 22-1-91 - Reg.

Ref : 1. Government Finance Department Lr. No.117321/ PC.II/90-2 dated 21-11-90.

2 From the Joint Secretary to Government, Fince Department D.O.Lr. No.105442/PC.II/90-5 dated 18-1-91 addressed to certain heads of departments.

I invite your attention to the references cited. Instruction have already been issued to all Heads of Departments aud Department of Secretariat for taking speedy action to arrange for crediting the Pay Commission arrears to General Provident Fund account of the employees before 31-3-1991 and to send a report in this regard to Government. So far no Head of Deparment has furnished the report to Government on this matter.

2. During a review meeting with Chief Accounts Officers of few Heads of Departments held on 22-1-91, It has been noticed that in some departments, the progress of work is practically 'nil' and in some department the progress is very meagre and no department has completed the work in full so far. It has therefore been decided at the meeting that speedy action should be taken to draw the arrears and credit it to General Provident Fund account of the employees. In respect of Madras City Offices, the work should be completed on or before 31-1-91 and in respect of district offices outside the Madras city, the work should be completed on or before 28-2-91.

3. I therefore request you to kindly look into the matter personally and issue suitable immediate instructions to all drawing and disbursing officers under your control to adhere to the above dates for drawing the arrears and to credit it to Generel Provident Fund account of the employees and also to fix the responsibibility on Chief Accounts Officers or the concerned Officer-in charge of your department for speedy action in the matter and for completion of the work in time. Fortnightly progress Report should be sent to the Government about the work as on 1-2-91; 15-2-91 and 1-3-91 without fail.

Yours faithfully,
for Joint Secretary to Government.

## சி ஐ டி கழகத்தில் மீண்டும் இணைந்துள்ள சங்கங்கள்

1) தமிழ்நாடு இந்து சமய அறநிலை ஆட்சித்துறை அலுவலக உதவியாளர், ஓட்டுனர் மற்றும் பதிவறை எழுத்தர் சங்கம்.

2) மோட்டார் வாகன பராமரிப்புத்துறை அமைச்சுப் பணியாளர் கழகம்.

வருக ! வருக ! என வரவேற்கிறோம்

# சேலத்தில் மேதகு தமிழக ஆளுனர் !

சேலத்திற்கு 26-3-91 அன்று வருகை தந்த மேதகு தமிழக ஆளுனர் திரு. பீஷ்ம நாராயணசிங் அவர்களை தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை இரவு காவலர்கள் கழகத்தின் சார்பில் மாநிலத் தலைவர் திரு. பெ. மனோகரன் அவர்கள் சந்தித்து பின் வரும் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை கொடுத்தனர் :-

1) தொகுப்பூதியம் மதிப்பூதியம், தினக்கூலி எனும் இரவுக் காவலர்களுக்கு ரூ. 750/- அடிப்படைச் சம்பளம் வழங்கக் கோரல்
2) இரவு காவலர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை அளித்தல்,
3) அலுவலக உதவியாளர் காலி பணியிடத்தில் காவலர்களை நியமித்தல்,
4) கல்வித்துறையில் பணிபுரியும் நடத்தாட்டிகளை ஊதிய விகிதத்தின் கீழ் கொண்டு வருதல்,
5) பெருக்குனர்களுக்கு மாதம் ரூ. 70/- என்று தரப்படுவதை ரூ. 450/–ஆக உயர்த்தக் கோரல்,

இந்த சந்திப்பின்போது மாநில செயலாளர் திரு. எஸ். பாபு, மாநில பொருளாளர் திரு. மு. சுந்தரம், மாநில துணைத் தலைவர் திரு. சி. அருணாசலம், மாவட்டத் தலைவர் திரு. உத்திரபாலகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# பாராட்டுகிறோம் !

தமிழக அரசில், நிதித்துறை பணிபுரிந்து வந்து, சார்புச் செயலாளராகவும், இணைச் செயலாளர் அந்தஸ்தில், நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் நிதி ஆலோசகராக பணிபுரிந்து திரு. வி.டி. பாஸ்கரன், பி.ஏ., அவர்கள் 28-2-91ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். திரு. வி. டி. பாஸ்கரன் அவர்கள் விதிகளுக்குட்பட்டு, நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித்தந்தவர் ஆவார். திரு, வி.டி. பாஸ்கரன் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டாலும் அவர் நல்ல உடல் நலத்துடன் பல்லாண்டு வாழ்க ! என வாழ்த்துகிறோம்.

---

## ஓய்வு பெற்றார்கள் ! நலன்கள் பெற வாழ வேண்டும் !

நெடுஞ்சாலைத் துறையில் டி & எம். டிவிஷனில் பணிபுரிந்து வந்த திரு. ஆர். சிவ ராமராஜன் (டர்னர்) திரு. எல். ஞானப்பிரகாசம் (ஓட்டுனர்) ஆகியோர் 28-2-91 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இந்த இருவரும் நலன்கள் பெற்று பல்லாண்டு வாழ்க வாழ்த்துகிறோம்.

## திருத்தம்

பிப்ரவரி'91 அரசு அலுவலர் இதயக்குரல் இதழில் ஆசிரியரால் எழுதப்பட்ட தலையங்கத்தில் ஆளுனரின் ஆலோசகரின் பெயர் திரு. வி. இராமச்சந்திரன் என்பதற்கு பதிலாக திரு. வி. ராமகிருஷ்ணன் என அச்சடிக்கப் பட்டுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

# ஆளுனரின் ஆலோசகருடன் சந்திப்பு

7-4-91 அன்று கோவை வந்திருந்த ஆளுனரின் ஆலோசகர் திரு. வி. கார்த்தி கேயன் அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து பின்வரும் கோரிக்கைகள் குறித்து விவாதித்தார்.

1) அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகையினை 3 தவணைகளில் கொடுத்திருப்பதை மாற்றி ஒரே தவணையில் வழங்குமாறும்;

2) மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக தமிழக அரசு அலுவலர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்குமாறும்;

3) அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மாற்றி அமைக்கப்பட நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையினை பெற்று அமல்படுத்துமாறும்;

4) 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரையினால் தமிழக அரசு அலுவலர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள நிலுவைத் தொகையினை ரொக்கமாக வழங்குமாறும்; கேட்டுக் கொண்டார்.

இந்த சந்திப்பின் போது கோவை மாவட்டத் தலைவர் திரு. பெ. இராலிங்கம், மாவட்டச் செயலாளர் திரு. வி. செல்வம், நீலகிரி மாவட்டத் தலைவர் திரு. வைத்திஸ்வரன் கூட்டுறவுத்துறை அலுவலர் கழக மாநில பொதுச் செயலாளர் திரு. கனகராஜ், திரு வி. சம்பத்குமார் தொழிற்சாலை ஆய்வகத் துறை அலுவலர் கழக மாநிலத் தலைவர் திரு. க. பொன்னன், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் கழகத்தின் மாநில இணைச் செயலாளர் திரு. கே. சங்கரன் கோவை மாவட்டத் தலைவர் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

## மோட்டார் வாகன பராமரிப்புத்துறை அமைச்சுப் பணியாளர் கழகம்
## மாநில நிர்வாகிகள்

மாநிலத் தலைவர் :
திரு. ஏ. ஜனார்த்தனம்

கௌரவ ஆலோசகர் :
திரு ஆர். சீதாராமன்

மாநில பொதுச் செயலாளர் :
திரு. ம. சத்யம்

மாநில பொருளாளர் :
திரு. ஜி. பாலசௌரய்யா

மாநில துணைத் தலைவர்கள் :
திரு. கு. இலட்சுமணன்
திரு. பி. இராம்சுந்தர்

மாநில துணைப் பொதுச் செயலாளர் :
திரு. ஆ. தனசேகரன்

மாநில பிரச்சாரச் செயலாளர் :
திரு. ஆர். சேர்மக்கனி

தலைமை நிலையச் செயலாளர் :
திரு. எம். லூர்துசாமி

மாநில இணைச் செயலாளர்கள் :
திரு. த. சிவராமன்
திரு. தே. கோபிநாத்

பணி வெல்க! என வாழ்த்துகிறோம்.

# சந்திப்புகள்...

5-2-91அன்று வருவாய்த்துறை துணைச் செயலாளர் திரு கே.பி.சண்முகம் அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க மோகன் அவர்கள் சந்தித்து வேளாண்மைத் துறையில் புதியதாக துவங்கப்பட்டுள்ள 100 வேளாண்மை விரிவாக்க மையங்களில் பணியாளர்களை நியமிப்பது குறித்து விரைவில் ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பின் போது வேளாண்மைத் துறை பதிவுரு எழுத்தர் சங்க நிர்வாகி திரு. கோபால் உடனிருந்தார்.

11-2-91 அன்று ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் மற்றும் செயலாளர் டாக்டர். எஸ். நாராயணன், இ.ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் அவர்கள் சந்தித்து பின்வரும் பிரச்னைகள் குறித்து விவாதித்தார்

1. நகரியங்களில் செயல் அலுவலர்களை நியமிக்க வேண்டும்
2. ஊராட்சிகளை பேரூராட்சிகளாக தரம் உயர்த்துதல்;
3. பேரூராட்சித் துறை இயக்குனராக

ஐ.ஏ.எஸ். அலுவளாரை நியமிப்பது குறித்து. இந்த சந்திப்பின் போது பேரூராட்சி செயல் அலுவலர்கள் சங்க மாநிலத் தலைவர் திரு. வா. பத்மநாபன், மாநில பொதுச் செயலாளர் திரு க. மாசானம், மாநிலப் பொருளாளர் திரு. என் கிருஷ்ணசாமி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்

பள்ளிக் கல்வி இயக்கக இணை இயக்குனர் அவர்களை சந்தித்து கல்வித் துறை பணியாளர்களின் முக்கிய கோரிக்கைகள் குறித்து மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் விவாதித்தார்.

14-2-91 அன்று வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் திரு. அருமைசிங், பி.ஈ., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சத்தித்து பொறியியல் துறை அமைச்சுப் பணியாளர்கள் பிரச்னை குறித்து விவாதித்தார். இந்த சந்திப்பின் போது மாநில பிரச்சாரச் செயலாளர் திரு. பெ. சந்திரசேகரன், வேளாண்மைத் துறை அமைச்சுகப் பணியாளர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் திரு. தா. வின்செண்ட், மற்றும் திரு. K. ரவீந்திர நாத் ஆகியோர் உடனிருந்தனர்.

18-2-91 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் திரு. எம். எம். இராஜேந்திரன், இ ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன், மாநில பிரச்சாரச் செயளாளர் திரு.பெ. சந்திரசேகரன், சென்னை மாவட்டத் தலைவர் திரு. ஏ.ஆர். சுந்தர்ராஜ், சென்னை மாவட்டச் செயலாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் தஞ்சை மாவட்ட நிர்வாகி திரு வாசுதேவன் ஆகியோர் சந்தித்து சந்தனமாலை அணிவித்து தலைமைச் செயலாளராக பணிபுரிந்த காலத்தில் சி&டி கழகத்தின் பேரில் அவர் கொண்டிருந்த நியாயமான உணர்வுகளுக்கு நன்றி கூறினர்.

19-2-91 அன்று சமூகநலத்துறை, அரசுச் செயாளர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் சத்தித்து சமூகநலத்துறையில் பதவி இறக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் குறித்து விவாதித்தார். இந்த சந்திப்பின் போது வடாற்காடு மாவட்டத் தலைவர் திரு. இரா சுப்ரமணியன், வேளாண்மை விரிவாக்க மையபணியாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் திரு. அப்துல்குத்தூஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

19-2-91 அன்று வேளாண்மைத் துறை கூடுதல் வேளாண்மை இயக்குனர் திரு. க. இளங்கோவன், இ.ஆ.ப, அவர்களை சந்தித்து வேளாண்மை விரிவாக்க மைய பணியாளர் சங்க மாநில செயற்குழு தீர்மானங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. அத்துடன் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு சிறப்பு நிலை உத்தரவிடுவதில் ஏற்பட்டுள்ள காலதாமத்தினை எடுத்துரைத்தார். இந்த சந்திப்பின் போது வேளாண்மை விரிவாக்க மைய பணியாளர் சங்க மாநில துணைத்தலைவர் திரு. இரா.சுப்ரமணியன்,

மாநில பொதுச் செயலாளர் திரு. அப்தூல் குத்தூஸ், ஈராண்டு சங்க மாநில நிர்வாகி கள் திரு. இராமலிங்கம், திரு. பெ. முத்து ராமலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குனர் திரு. அ. சண்முகம், இ.ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் அவர்கள் 20-2-91 அன்று சந்தித்து பயிற்சித்துறையில் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறைப் படுத்துதல் சம்பந்தமாக விரைவில் ஆணை பிறப்பிக்கு மாறு கோரிக்கை விடுத்தனர். இந்த சந்திப் பின் போது சென்னை மற்றும் மதுரை மாவட்டத் தலைவர்கள் திரு. ஏ.ஆர். சுந்தர் ராஜ், திரு. டி. சூசைரத்தினம் ஆகியோர் உடனிருந்தனர்.

25-2-91 அன்று வருவாய் நிர்வாகத் துறை ஆணையர் திரு. ஜி. ஜாஸ், இ.ஆ.ப. அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் அவர்கள் சந்தித்து சேலம் மாவட் டத்தில் காலியாகஉள்ள இளநிலை உதவியா ளர் பணியிடத்தில் நில அளவைத் துறை தொகுப்பூதிய பணியாளர்களை நியமிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண் டார். இந்த சந்திப்பின் போது நில அள வைத் துறை தொகுப்பூதிய நில அளவர் வரைவாளர் கழகத்தின் மாநிலத் தலைவர் திரு. சேகர் உடனிருந்தார்.

1-3-91 அன்று கல்வித் துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. எம். சங்கரசுப் பையயன், இ.ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் அவர்கள் சந்தித்து பொதுநூலகத்துறை தரம். 3 நூலகர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என் றும் தேர்வு நிலை பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கிடப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தார். இந்த சந்திப்பின் போது எனது பொதுநூலகத்துறை பணி யாளர் சி&டி கழக மாநிலத் தலைவர் திரு. எம் ஜி. செல்வம், மாநில துணைத் தலைவர் திரு. எம். குப்புசாமி, சென்னை மாவட்டத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

1-3-91 அன்று தொழில் வணிகத் துறை இயக்குனர் அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் அவர்கள் சந்தித்து, தொழில் வணிகத்துறையில் அமைச்சுப் பணியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பின் போது தொழில் வணிகத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு கா.மா. ஜெகதீசன் அவர்கள் உடனிருந்தார்.

பொதுப் பணித்துறை முதன்மை பணி அலுவலர் அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் அவர்கள் சந்தித்து பொதுப்பணித் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினை தவிர்க்க நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பின் போது பொதுப் பணித்துறை அமைச்சுப் பணியாளர் கழக மாநிலத் தலைவர் திரு. ஆர். பரசுராமன், மற்றும் திரு. ராஜ்மோகன் ஆகியோர் உடனிருந் தனர்.

மேதகு ஆளுனரின் ஆலோசகர் திரு. வி. இராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் அவர் கள் 5-3-91 அன்று சந்தித்து பின்வரும் கோரிக்கைகள் குறித்து விவாதித்தார்.

1. பொதுப்பணித்துறையில் காவேரி மேம் படுத்தும் திட்டம் தஞ்சை மாவட்டத்தி லிருந்து பிற மாவட்டங்களுக்கு மாற்றப் படுவதால் 200 பணியாளர்களுக்கு ஏற் பட உள்ள பாதிப்பினை தவிர்க்கு மாறும்;

2. பேரூராட்சித் துறையில் இயக்குனராக ஒரு ஐ ஏ.எஸ் அலுவலரை நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண் டார்.

இந்த சந்திப்பின் போது பொதுப் பணித்துறை அமைச்சுப் பணியாளர் கழக மாநிலத் தலைவர் திரு. ஆர். பரசுராமன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

5-3-91 அன்று கால்நடை பராமரிப்புத் துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. ஆர். ஏ. சீதாராம்தாஸ், இ.அ.ப., அவர் களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து பின்வரும் கோரிக்கைகள் குறித்து விவாதித்தனர் :-

1) பால்வளத் துறையில், திருச்சி திட்ட மேலாளர் பதவியில் நியமனம் செய்யுமாறும்,

2) கூட்டுறவு பயிற்சி பெற்ற அமைச்சு பணியாளர்களுக்கு மாற்றுப் பணி வழங்குமாறும் கேட்டுக் கொண்ட னர்.

இந்த சந்திப்பின்போது பால்வளத்துறை அலுவலர் கழகத்தின் நிர்வாகிகள் திரு. சண்முகம், திரு. தியகமணி, திரு. ஆதி கேசவன் உடனிருந்தனர்.

8-3-91 அன்று வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் திரு. அ. சண்முகம், இ.அ.ப. அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து பின்வரும் கோரிக்கைகள் குறித்து விவாதித்தார் :-

அ) இளநிலை பயிற்சி அலுவலர்-உதவி பயிற்சி அலுவலர் பதவிகளை இணைத்தல்,

ஆ) பயிற்சி அலுவலர் முதுநிலை பட்டியல் வெளியிடுதல்,

இ) பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறைப் படுத்தல்;

இந்த சந்திப்பின்போது மதுரை மாநகர் மாவட்டத் தலைவர் திரு. டி. சூசைரத்தினம் சென்னை மாவட்டத் தலைவர் திரு. ஏ. ஆர். சுந்தர்ராஜீ ஆகியோர் உடனிருந்தனர்.

பதிவுத்துறைத்தலைவர் திரு.காசிநாதன் இ.ஆ.ப., அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து பணி யாளர் பாதிப்பு குறித்து எடுத்துரைத்தார்.

மோட்டார் வாகன பராமரிப்புத்துறை இயக்குனர் திரு. ஜெயராஜ் அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து மோட்டார் வாகன பராமரிப்புத்துறை அமைச்சுப் பணியாளர் களின் கோரிக்கைகள் குறித்து விவாதித்தார் இந்த சந்திப்பின்போது கௌரவ ஆலோ சகர் திரு. ஆர். சீதாராமன், மாநிலப்பொது செயலாளர் திரு. ம. சத்யம், மாநிலப் பொருளாளர் திரு. ஜி. பாலசௌரய்யா, சென்னை கிளை செயலாளர் திரு. ஜெய் குமார், கிளைத்தலைவர் திரு. பழனி, செயற் குழு உறுப்பினர்கள் திரு. யாகூப், பாலச் சந்தர் ஆகியோர் உடனிருந்தனர்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வீ. ராமச்சந்திரன் அவர்களை 20-3-91 அன்று மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து பொதுப்பணித்துறை தொழில் நுட்ப பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கிட்டு தேர்வு நிலை மற்றும் ஒய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பேரூராட்சித்துறை இயக்குனராக ஐ.ஏ-எஸ் அலுவலரை நியமித்தமைக்கு நன்றி தெரி வித்து கொள்ளப்பட்டது.

இந்த சந்திப்பின்போது மாநிலப் பொருளாளர் திரு. வா. பத்மநாபன் பொறி யியல் பணியாளர் சங்க பொதுச்செயலாளர் திரு. பி. குமாரவேலு ஆகியோர் உடனிருந் தனர்.

ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. எஸ் நாராயணன் இ.ஆ.ப., அவர்களை 20-3-91 அன்று மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சத்தித்து பேரூராட்சி இயக்குன ராக ஐ ஏ.எஸ். அலுவலரை நியமித்தமைக்கு நன்றி தெரிவித்து கொண்டார். பேரூராட்சி பணியாளர்களின் பணி விதிகளில் திருத்தங் களை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டார். இந்த சந்திப்பின் போது பேரூராட்சி செயல் அலுவலர் சங்க மாநிலத் தலைவர் திரு. வா. பத்மநாபன், மாநில துணைத் தலைவர் திரு. சண்முகம், மாநில இணைச்செயலாளர் திரு. ரகுந்தன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

21-3-91 அன்று மருத்துவத் துறை இயக்குனர் அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து சேலத்தில் மாறுதல் செய்யப்பட்ட ஊர்தி ஓட்டுநர் கழக மாநில பொதுச் செயலாளர் திரு. மு. கண்ணன் அவர்களின் மாறுதலை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பின்போது ஊர்தி ஓட்டுநர் கழக மாநிலத் தலைவர் திரு. சீனிவாசன் உடனிருந்தார்.

குடும்ப நலத்துறை கூடுதல் இயக்குநர் திரு. கோ. இராதாகிருஷ்ணன் அவர்களை மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் 22-3-91 மற்றும் 27-3-91 ஆகிய நாட்களில் சந்தித்து ஊர்தி ஓட்டுநர் கழக மாநில பொதுச் செயலாளர் திரு. மு. கண்ணன் அவர்களின் மாறுதல் குறித்து விவாதித்தார். இந்த சந்திப்பின்போது சென்னை மாவட்டத் தலைவர் திரு. ஏ. ஆர். சுந்தர்ராஜ் உடனிருந்தார்.

ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை இயக்குனராக பொறுப் பேற்றுள்ள திரு. அ. இளங்கோவன், இஆப. அவர்களை 27-3-91 அன்று மாநிலத்தலைவர் திரு. கீ. க. மோகன் அவர்கள் சந்தித்து மாவட்டாட்சியராக பொறுப்பு வகித்த நேரத்தில் இக்கழகத்தின் நியாயமான கோரிக்கைகளுக்கு சாதகமான ஆணை பிறப்பித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். இத்துடன் சி & டி கழக் நிர்வாகி திரு. மு. ஸ்ரீராமன் அவர்களை சேலத்திலிருந்து சென்னைக்கு மாறுதல் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்,

# இணைப்புச் சங்கச் செய்திகள் :

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலக உதவியாளர் ஓட்டுநர் மற்றும் பதிவரை எழுத்தர் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் 9-3-91 மற்றும் 10-3-91ல் ஒகனேக்கல்லில் சேலம் மண்டலத் தலைவர் தகடூர் இரா. வேணு கோபாலன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மாநிலச் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் :-

1) அலுவலக உதவியாளர்கள் தேர்வு நிலைக்கு செல்லும்போது ரூ. 800/- என்ற ஊதிய விகிதம் நிர்ணயிக்கக் கோரல்,
2) அலுவலக உதவியாளர்களுக்கு பதிவரை எழுத்தராக பதவி உயர்வு வழங்கும் போது அந்தந்த கோட்டத்திலேயே பணிபுரிய அனுமதித்தல்,
3) கோவை மாவட்ட உதவி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரிந்த அலுவலக உதவியாளர்களை ஒட்டுமொத்தமாக மாறுதல் செய்ததை ரத்து செய்யக் கோரல்,
4) மாவட்டங்களில் ஏற்படும் பிரச்சனைகளை சங்கப் பிரதிநிதிகளை அழைத்து கூட்டங்களை நடத்த துணை ஆணையர்களுக்கு உத்திரவிடுதல்,
5) இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 10 சதவிகித பணியிடங்களை கீழ்நிலை பணியாளர்களிலிருந்து பதவி உயர்வு வழங்கக் கோரல்,
6) அலுவலக உதவியாளர்கள் அமர்வதற்கு நாற்காலிகள் வழங்க ஏற்பாடு செய்யுமாறும்,
7) அலுவலக உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகை அடிப்படையிலான பாலியஸ்டர் சீருடை வழங்குமாறும்,

இந்த மாநில செயற்குழுவில் மாநிலத் தலைவர் திரு. சி. இராமமூர்த்தி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**இணைப்புச் சங்கச் செய்திகள் ....**

24-3-91 அன்று மதுரையில் மாநிலத் தலைவர் திரு. ஐ. செயராமன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அலுவலர் கழக தலைமை செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1) கூட்டுறவுத் தேர்தல்களினால் பணி நீக்கம் செய்யப்பட்ட இளநிலை ஆய்வாளர்களுக்கும், கட்டாய, விடுப்பில் காத்திருக்கும் கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கும் உடனடியாக பணி கிடைக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

2) கூட்டுறவுத் தேர்தலின் போது மேலூர் திருப்பரங்குன்றம் மற்றும் தமிழகம் முழுவதும் பல இடங்களில் கடமையாற்றிய கூட்டுறவுத் துறை அலுவலர்களை தாக்கி கலகம் விளைவித்தவர்களின் பேரில் காவல் துறை துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

3) வெளி மண்டலங்களில் பணியில் சேரும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மூன்றாண்டுகள் முடிவடைவதற்குள் பணி மாறுதல் விண்ணப்பமே தரக் கூடாது என வெளியிடப்பட்டுள்ள தடையினை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாநிலப் பொருளாளர் திரு. கோ. தனபால் வரவேற்புரை நிகழ்த்தினார். புதுக்கோட்டை திரு. ஆழ்வார்சாமி தீர்மானங்களை விளக்கி பேசினார். மாநில இணைச் செயலாளர் திரு. அ. பாஸ்கரன் நன்றி தெரிவித்தார்.

---

# பிரிவு உபசார விழா

வேலூரில் பணிபுரிந்து வந்த காவலர்கள் திரு. மார்க்கபந்து மற்றும் திரு. இராமச்சந்திரன் ஆகியோர் பணியிலிருந்து ஓய்வு பெற்றதை முன்னிட்டு 2-2-91 அன்று தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை இரவு பாதுகாவலர்கள் சங்கத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் திரு. சி. ஆறுமுகம் அவர்களின் தலைமையில் பிரிவு உபசார விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சி&டி கழக மாவட்டத் தலைவர் திரு. இரா. சுப்ரமணியன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு பாராட்டினர்.

## திருப்பத்தூர் வட்ட பொதுக்குழுக் கூட்டம்

சி&டி கழக, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டக் கிளையின் பொதுக் குழுக் கூட்டம் தலைவர் திரு. தா. திருப்பதி அவர்களின் தலைமையில 24-2-91 அன்று திருப்பத்தூரில் நடைபெற்றது. இந்த பொதுக்குழுவில் மாவட்டத் தலைவர் திரு. இரா. சுப்ரமணியன் மாவட்டச் செயலாளர் புலவர் திரு. சீ.வி. சுப்ரமணியம் மாவட்ட இணைப்புச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய சாலைப்பணியாளர் சங்கத்தின் மாநிலப் பொதுக்குழு

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய சாலைப் பணியாளர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுக்குழு 10-3-91 அன்று புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் திரு. வி. தங்கவேலு, மாநில பொதுச் செயலாளர் திரு. உ. முத்தையா, மாநிலப் பொருளாளர் திரு. வே. வீரணன் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*முக்கிய தீர்மானங்கள் :-*

1) பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கிட்டு ஊராட்சி ஒன்றியச் சாலைப் பணியாளர்களுக்கு பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் வழங்கக் கோரல்,
2) சாலைப் பணியாளர்களை குடும்ப கட்டுப்பாடு திட்டத்திற்கு பயன்படுத்துவதை தடை செய்யக் கோரல்.
3) ஊராட்சி ஒன்றிய சாலைப் பணியாளர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகையினை அமல்படுத்தக் கோரல்.

---

## தமிழ்நாடு வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் சங்கத்தின் மாநிலச் செயற்குழு

தமிழ்நாடு வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறையில் 16-3-91 அன்று மாநிலத் தலைவர் திரு. ஏ. ராஜு, எம்.ஏ., பி.ஜி.எல்., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. 10 அம்ச கோரிக்கைகளை 15-4-91க்குள் நிறைவேற்றித் தருமாறு தமிழக அரசினை கேட்டு தீர்மானத்தினை நிறைவேற்றியுள்ளனர்.

*முக்கிய தீர்மானங்கள் :-*

1) டெபுடி கலெக்டர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்களின் ஊதியத்தை உயர்த்துதல்,
2) மண்டல துணை வட்டாட்சியர்கள் பதவியினை உருவாக்குதல்,
3) வட்டார வினியோக அலுவலர் பதவிகளை வட்டாட்சியர் தரத்திற்கு உயர்த்துதல்,
4) மாவட்டாட்சியர் அலுவலகங்களில் வட்டாட்சியர்களை பிரிவு அலுவலர்களாக நியமித்தல்,
5) நல திட்டங்களை அமல்படுத்துவதற்கு சிறப்பு வட்டாட்சியர் பதவிகளை வட்ட அளவில் உருவாக்குதல்,
6) சிறுசேமிப்பு மற்றும் குடும்ப கட்டுப்பாடு பணிகளில் வட்டாட்சியர் துணை வட்டாட்சியர்களை ஈடுபடுத்துவதை நிறுத்தக் கோரல்,
7) டெபுடி கலெக்டர் பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்வதை தடைசெய்தல்.

# வாழ்த்துகிறோம் !

பேரூராட்சி செயல் அலுவலர்கள் சங்கத்தின் முன்னாள் மாநில பொதுச் செயலாளரும் மூத்தத் தலைவருமான திரு எம். கே. குலாப் பாட்சா, பி.ஏ., அவர்களின் மகன் திரு. ஜி. முகம்மது இசுதீன் எம்.ஏ., அவர்களுக்கும், ஜனாப் திரு. ஏ. அப்துல் ரசாக் அவர்களின் மகள் அபீதா அவர்களுக்கும் 10-2-91 அன்று சென்னையில் திருமணம் நடை பெற்றது. இந்த திருமணத்திற்கு பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்களும், பேரூராட்சித் தலைவர்களும், சி & டி கழகத்தின் மாநிலத் தலைவர் திரு. கீ. க மோகன் அவர்களும், செயல் அலுவலர்கள் சங்க மாநில மாவட்ட நிர்வாகிகளும், அமைச்சுப் பணியாளர்கள் கழக மாநில மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

தர்மபுரி மாவட்ட, மத்தூரில் உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரியும் திரு. ஜி. சுரேஷ்குமார் அவர்களுக்கும், செல்வி டி. எஸ். உஷாராணி, பி.எஸ்ஸி., அவர்களுக்கும் தர்மபுரியில் 18-2-91 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தில் ஈராண்டு சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட பேரூராட்சி அமைச்சுப் பணியாளர் கழகத்தின் செயலாளர் திரு.மு.சிவகுமார் அவர்களின் மகள் செல்வி அகிலா அவர்களுக்கும் செல்வன் இராஜேந்திரன் அவர்களுக்கும் 25-2-91 அன்று மதுக்கரையில் திருமணம் நடைபெற்றது. பேரூராட்சி அமைச்சுப்பணியாளர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

ஈராண்டு சங்க மதுரை மாவட்ட தணிக்கையாளர் திரு. இரா. கிருஷ்ணசாமி அவர்களின் மகள் செல்வி கவிதா அவர்களுக்கும் செல்வன் திரு. கே. காமராஜ் அவர்களுக்கும் ஓடைப்பட்டியலில் 3-3-91 அன்று திருமணம் நடைபெற்றது. ஈராண்டு சங்க மதுரை மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

செங்கை அண்ணா மாவட்ட சி & டி கழக தலைவர் திரு பி. செல்வராஜ் அவர்களின் மகள் செல்வி எஸ். செந்தமிழ்ச்செல்விக்கு மஞ்சள் நீராட்டு விழா 7-3-91 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சி & டி கழக மாநிலத் தலைவர் திரு. கீ. க. மோகன், மாநில பிரச்சாரச் செயலாளர் திரு. பெ. சந்திரசேகரன், மாநிலப் பொருளாளர் திரு. வி. பத்மநாபன், செங்கை அண்ணா மாவட்ட நிர்வாகிகள் வேளாண்மைத்துறை அலுவலர்கள், பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொண்டு செல்வி எஸ். செந்தமிழ்ச்செல்வியை வாழ்த்தினர்.

தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை அலுவலக உதவியாளர்கள் மாநிலச் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் திரு. ந. தியாகராஜன் அவர்களின் சுவீகார புத்திரியான செல்வி தீபாவுக்கு 7-3-91 அன்று சென்னையில் மஞ்சள் நீராட்டு விழா நடைபெற்றது. இதத நிகழ்ச்சியில் தலைமைச் செயலக அலுவலர்கள், சங்க நிர்வாகிகள், பல்வேறு தோழமைச் சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

திண்டுக்கல், புனிதமரியன்னை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு. என் சுப்பிரமணியன், பி. எஸ்ஸி., பி. எட்., அவர்களின் புதல்வியும், வந்தவாசி உதவி வேளாண்மை அலுவலர் திரு. என்.எஸ். சரவணன், டி.அக்ரி அவர்களின் சகோதரியுமான செல்வி எஸ். குணவதி, பி எஸ்ஸி., அவர்களுக்கும், செல்வன் கே. பி. மனோகரன், பி.எஸ்ஸி., அவர்களுக்கும், திண்டுக்கல்லில் 3-4-91 அன்று திருமணம் நடைபெற்றது. உற்றார் - உறவினர்கள், ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# வருந்துகிறோம்

● சி&டி கழகத்தின் கோவை மாவட்ட துணைத் தலைவர் திரு. வி. முருகேசன், பி.காம்., (கூட்டுறவு தணிக்கைத் துறை) அவர்கள் 7-2-91 அன்று இறந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். திரு வி. முருகேசன் அவர்கள் சி&டி கழகத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருந்தார். இவரது குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். 8-2-91 அன்று கோவையில் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் மாவட்டத் தலைவர் திரு. பெ. இராமலிங்கம், கூட்டுறவுத்துறை அலுவலகர் கழக மாநில பொதுச் செயலாளர் திரு. பா. கனகராஜ், மாவட்டச் செயலாளர் திரு. வி. செல்வம், அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக திரு. கிருஷ்ணசாமி, ஜாக்டீ சார்பில் திரு. வெங்கடாசலம் அவர்களும் உற்றார், உறவினர்கள் அரசு அலுவலர்கள் பெருத்திரளாக கலந்து கொண்டார்.

● பொது நூலகத்துறை அலுவலர் சி&டி கழகத்தின் மாநிலத் தலைவர் திரு. எம். ஜி. செல்வம் அவர்களின் தகப்பனார் திரு எம். கங்காதரன் அவர்கள் தமது 73 வயதில் இறந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சி&டி கழக மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன், மாநில பிரச்சாரச் செயலாளர் திரு. பெ. சந்திரசேகரன், சென்னை மாவட்டத் தலைவர் திரு ஏ.ஆர். சுந்தர்ராஜ் மற்றும் பொது நூலகத் துறைப் பணியாளர்கள் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், உற்றார் உறவினர்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர். திரு. எம்.ஜி. செல்வம் அவர்களை வளர்த்து ஆளாக்கி, பொதுத் தொண்டில் ஈடுபடச் செய்த அந்த மாமனிதர் இன்று மறைந்து விட்டார். அவரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகிறோம்.

● சி&டி கழக மாநில பிரச்சாரச் செயலாளர் திரு. பெ. சந்திரசேகரன் அவர்களின் தாயார் திருமதி குள்ளம்மாள் அவர்கள் 23-3-91 அன்று மரணம் அடைந்து விட்டார். சி&டி கழக மாநிலத் தலைவர் திரு. கீ.க. மோகன் சென்னை மாவட்டத் தலைவர் திரு. ஏ. ஆர். சுந்தர்ராஜ், சென்னை மாவட்டச் செயலாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை மாவட்ட துணைத் தலைவர் திரு. கா.மா. ஜெகதீசன், அமைப்புச் செயலாளர் திரு. தங்கவேலு இணைச்செயலாளர் திரு. சு. அர்ச்சுனன், மற்றும் நிர்வாகிகள் திரு. சாந்தமூர்த்தி, திரு. தா. வின்செண்ட், திரு. கே. ரவீந்திரநாத், திரு. எஸ். சாமிநாதன், திரு. இராமானுஜம், திரு. கிருஷ்ணசாமி, திரு. ஜேம்ஸ், திரு. ஜேம்ஸ் தேவசகாயம், பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர். திரு. பெ.சத்திரசேகரன் அவர்களை பாலூட்டி, சீராட்டி வளர்த்து ஒரு சிறந்த செயல் வீரனாக, பேச்சாளராக, தூய தொண்டாற்றும் தொண்டனாக படைத்துள்ள அந்த அன்னையின் இழப்பு திரு. பெ. சந்திரசேகரன் அவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதாகும். அன்னையை இழந்து வாடும் அவருக்கு நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வோம்.

● கோவை செயலாளர் திரு. வி. செல்வம் அவர்களின் மாமியார் திருமதி சரோஜா அம்மாள் 9-2-91 அன்று இறந்து விட்டார். அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்து இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

● சேலம் மாவட்டத்தில், இந்து சமய அறநிலையத் துறையில் தணிக்கை ஆய்வாளாராக பணிபுரிந்து வந்த திரு. க. சம்பத் குமார் அவர்கள் 8-12-90 ல் இறந்து விட்டார். அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்ப நலம் ஏற்பீர்!
குழந்தை நலம் காப்பீர்!

திட்டமிட்ட குடும்பம்
தெவிட்டாத இன்பம்!

பெண்ணுக்கு சம உரிமை கொடுப்போம்!
பெருகிவரும் மக்கள்தொகை தடுப்போம்!

புகைப்பழக்கம் புற்றுநோயை வளர்க்கும்
நாளடைவில் அதுவே உயிரையும் குடிக்கும்!

பெண்களுக்கு இருபதுக்குப் பின்னரே திருமணம்
அதுவே வாழ்வின் நறுமணம்.

நன்றி : குடும்பநலம் செய்திக் கதிர்.

Mar.91 April. '91 / Regd. No. TN/MS(C)/999 "ARASU ALUVALAR IDAYAKKURAL'
G.O.Ms. No. 338 Personnel and Administrative Reforms (Per.K) Department Dt. 8-6-88

## வேண்டுகோள் !

சி & டி கழகத்தின் மாத இதழ்
அரசு அலுவலர் இதயக்குரல்
வருடச்சந்தா ரூ. 20/- மட்டுமே
சந்தாதாரர்களாக சேர்ந்து
பயனடைவீர் !
கவிதைகள், கதை, கட்டுரைகள்
வரவேற்கப்படுகின்றன

1990-ம் ஆண்டிற்கான
இணைப்புக் கட்டணம்
செலுத்தாத சங்கத்தினர்
உடனே செலுத்திடுவீர்.

— ஆசிரியர்.

தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (C & D)
சங்கத்திற்காக வெளியிடுபவரும்,
ஆசிரியரும் :
கி. க. மோகன், B.A.,

அச்சிடுபவர் :

T. சந்திரா
ராசாத்தி பிரிண்டர்ஸ்,
182, பெல்ஸ் சாலை, சென்னை - 5.
தொலைபேசி : P.P. 848223

BOOK-POST

Thiru / Tmt. / Selvi

To
Thiru A. Elangovan, I.A.S.,
Director of Archives,
Egmore,
Madras 600008

'அரசு அலுவலர் இதயக்குரல்'

முகவரி சரியின்றேல் திருப்பி அனுப்புக :
தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (C&D)
அரசு அலுவலகங்கள் வளைவு
சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி : 846245